| S–0819 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C1 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## First Semester

## தமிழ்

## இக்கால இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. பாரதியார் புண்ணியம் கோடி எப்பொழுது கிடைக்கும் என்று கூறுகிறார்.

2. அமுதவல்லி உயிர் எமக்கு வெள்ளம் அல்ல என்று கூறக் காரணம் யாது?

3. தருமு சிவராம் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞரின் சிறப்பினைத் தருக.

4. நா.காமராசன் அவர்களின் இரு கவிதைத் தொகுப்புகளின் பெயர்களை எழுதுக.

5. சாப விமோசனம் என்னும் சிறுகதையின் மையக்கரு யாது?

6. கு.ப. ராஜகோபாலன் படைப்புகளுள் இரண்டினை எழுதுக.

7. கண்டகாலன் குறிப்பு வரைக.

8. உவேசா அவர்கள் முதலில் பதிப்பித்த நூலின் சிறப்பினைத் தருக.

9. சமுதாயம் ஒரு வழுக்கு நிலம் என்று அண்ணா கூறக் காரணம் யாது?

10. அப்துல்கலாம் அவர்கள் எழுதிய சுயசரிதை நூலின் பெயர் என்ன?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கல்வியும், அறிவியல் நோக்கும் குறித்து பாரதியார் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) புரட்சிக்கவியில் மன்னன் என்ன திட்டம் தீட்டினான்?

12. (அ) மு.மேத்தாவின் மரங்கள் என்னும் கவிதைக் குறிப்பிடும் விழுமியங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) இன்குலாப் தம் கவிதைகளில் இயற்கையோடு பயணிக்கும் பாங்கினை சான்றுடன் எழுதுக.

13. (அ) சுந்தர ராமசாமி எழுதிய பிரசாதம் என்னும் சிறுகதையில் கூறப்படும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) சோகவனம் என்னும் தலைப்பில் சோ.தர்மன் எழுதியுள்ள சிறுகதையில் உள்ள கருத்துக்களை ஆராய்க.

14. (அ) மணிமேகலையும் மும்மணியும் என்னும் பகுதியில் உவேசா குறிப்பிடும் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மறவ நாட்டு மன்னன் சந்திரஹரியின் ஆட்சி சிறப்பை எழுதுக.

15. (அ) அப்துல்கலாம் அவர்கள் தாம் எப்பொழுது மகிழ்ச்சியாக இருந்ததாக சுயசரிதையில் குறிப்பிடுகிறார்?

(அல்லது)

(ஆ) அப்துல்கலாம் அவர்களின் வாழ்க்கை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக அமைவதை ஆராய்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. பாரதியார் எழுதிய கனவு என்னும் சுயசரிதை பக்கத்தில் காணலாகும் சமூக சிந்தனைகளை எழுதுக.

17. தற்கால கவிஞர்கள் தமது படைப்புகளில் சமூக அவலங்களை எவ்விதம் வெளிப்படுத்துகின்றார்கள்?

18. இமயம் என்பார் எழுதியுள்ள செல்லாத பணம் புதினத்தில் கானலாகும் சமூக மதிப்பீடுகளை ஆராய்க.

19. உ.வே.சா அவர்களின் கட்டுரை தொகுப்பில் கூறப்படும் இலக்கியச் செய்திகளை விவரிக்க.

20. நல்ல தீர்ப்பு என்னும் தலைப்பில் அண்ணா குறிப்பிடும் சமூக சீர்கேடுகளை ஆராய்க.

| S–0820 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### First Semester

### தமிழ்

### அற இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பாரதி படைத்த புதிய ஆத்திசூடியின் நோக்கம் யாது?

2. மடியின்மை என்றால் என்ன?

3. எது நட்பு? எது நட்பாகாது? குறள் வழி விளக்கம் தருக.

4. பேதைமை என்றால் என்ன?

5. நாலடியார் – நூற்குறிப்பு தருக.

6. திங்களையும் சான்றோரையும் நாலடியார் பாடல் எவ்வாறு ஒப்பிடுகிறது?

7. உயர்குடிப் பிறந்தோர் எவற்றிற்கெல்லாம் அஞ்சுவர் என நாலடியார் கூறுகிறது?

8. ஆசாரக்கோவை – சொல் விளக்கம்தருக.

9. சிறுபஞ்சமூலம் – பெயர்க்காரணம் தருக.

10. நான்மணிக்கடிகையில் "குழித்துழி நிற்பது நீர்" என்ற பாடலின் பொருளைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ  $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) "நாடு" அதிகாரத்தின் வழி வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சொல்வன்மையின் சிறப்புகளைத் திருக்குறள் வழி விளக்குக.

12. (அ) கள்ளுண்ணாமை அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடுவன யாவை?

(அல்லது)

(ஆ) நோய் குறித்த சிந்தனைகளை "மருந்து" அதிகாரத்தின் வழி எடுத்துரைக்க.

13. (அ) பெரியோர் துணைகொண்டு வாழ வேண்டுவதை நாலடியார் எவ்வாறு உணர்த்துகிறது?

(அல்லது)

(ஆ) ஆராய்ந்து கொள்ள வேண்டிய நட்பாக நாலயார் கூறுவன யாவை?

14. (அ) நாளாண்மைக்கு நாலடியார் குறிப்பிடும் உவமைகள் யாவை? விவரி.

(அல்லது)

(ஆ) நட்பிற் பிழை பொறுத்தலை உவமைகளுடன் விளக்குக.

15. (அ) நட்பு கொள்ளத் தகார் குறித்தும், அறத்திற்கான செயல்களுமாகத் திரிகடுகம் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) "பிறப்பு நெடுவாழ்க்கை", "அரசன் உபாத்தியாயன்" எனத் தொடங்கும் ஆசாரக்கோவை பாடல்களின் பொருளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை அதிகாரங்கள் வழி வள்ளுவரின் கருத்துகளை விவரி.

17. நட்பு, நட்பாராய்தல் அதிகாரங்களில் வள்ளுவர் குறிப்பிடும் நட்பின் சிறப்புகளை விளக்குக.

18. கல்வியின் சிறப்பினை நாலடியார் எவ்வாறு விளக்குகிறது? விவரி.

19. நல்லினம் சேர்தலை நாலடியார் கூறும் உவமைகளுடன் விளக்குக.

20. இனியவையும், இன்னாதவையுமாகக் கூறும் அறநெறிகளை நும் பாடப்பகுதி வழி விவரிக்க.

———————

| S–0821 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C3 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## First Semester

## தமிழ்

## தொல்காப்பியம் – எழுத்ததிகாரம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கும் விடையளி.

1. "தமிழ் கூறும் நல்லுலகம்" எனப் பனம்பாரனார் குறித்துக்காட்டும் உலகம் எது?

2. "மெய்யின் வழியது உயிர்த்தோன்று நிலையே"– விளக்குக.

3. மொழியிறுதி எழுத்துக்கள் எவை?

4. பகார, மகார பிறப்பிடத்தைக் குறிப்பிடுக.

5. எழுத்துச் சாரியைகளைக் குறிப்பிடுக.

6. குற்றியலுகர ஈற்று அளவைப் பெயர்க்குச் சாரியையாக அமைவது எது?

7. "நும் என் இறுதி இயற்கையாகும்"– விளக்குக.

8. பெயர்ச்சொல்லில் ஈறாக அமையாத இரு உயிரெழுத்துகளைக் குறிப்பிடுக.

9. "நும்" எனும் விரவுப்பெயர் வேற்றுமையில் எவ்வாறு புணரும்?

10. "பத்து" என்பதன் முன் "இரண்டு" வரும் போது எவ்வாறு புணரும்? விளக்குக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

பின்வருவனவற்றிற்கு **ஒரு பக்க** அளவில் விடையளி.

11. (அ) சுட்டு , வினா எழுத்துக்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) "மெய்ம்மயக்கம்" குறித்து சான்றுகளுடன் விளக்குக.

12. (அ) உயிரெழுத்துகளின் பிறப்பிடங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்யெழுத்துகளின் பிறப்பு குறித்து எடுத்துரைக்க.

13. (அ) புணர்ச்சியில் மெல்லினம் தோன்றும் இடங்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) அளவு, நிறை எண்ணுப்பெயர்கள் புணரும் திறத்தை விளக்குக.

14. (அ) ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) எண்ணுப்பெயர்கள் உருபோடு புணரும் போது நிகழும் மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

15. (அ) ணகர ஈற்றுப் புணர்ச்சிகளை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) "ஒன்பது" என்னும் எண்ணுப்பெயரோடு "பத்து, நூறு" புணருமாற்றை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நூன்மரபு எடுத்துரைக்கும் எழுத்து வகைப்பாடுகளைத் தொகுத்துரைக்க.

17. எழுத்துக்கள் பிறப்பின் பொது இலக்கணத்தை விளக்கியுரைக்க.

18. அளவைப் பெயர்கள் தம்முன் தாம் புணர்தல் விவரிக்க.

19. ஐகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைச் சான்றுகளுடன் விரித்துரைக்க.

20. எண்ணுப்பெயர்கள் புணரும் விதத்தினைக் குற்றியலுகரப் புணரியல் வழி ஆராய்க.

| S–0822 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1E1 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025.

## First Semester

## தமிழ்

## விருப்பப்பாடம் – பக்தி இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. காரைக்கால் அமையாரின் புதுமைகளைக் குறிப்பிடுக.

2. நாவுக்கரசரின் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

3. சிவபொருமான் எவ்விடத்தில் சுந்தரரை ஆட்கொண்டார்? விளக்கம் தருக.

4. மாணிக்கவாசகரின் பக்தி நெறி எத்தன்மையது?

5. ஆண்டாள் பாடிய நூல்களைக் குறிப்பிடுக.

6. முகுந்தமாலை என்ற நூலை இயற்றியவர் யார்? அதனை எம்மொழியில் இயற்றினார்?

7. அருணகிரிநாதரின் இளமை வாழ்க்கையைச் சுட்டுக.

8. கந்தரலங்காரம் – குறிப்பு வரைக.

9. குணங்குமஸ்தான்சாகிபு எச்சாயலில் பாடல்களை இயற்றினார்? விளக்கம் தருக.

10. வேதநாயக சாத்திரியார் இயற்றிய நூல்கள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) திருநாவுக்கரசரின் திருஅங்கமாலை வழி தெய்வபக்தியை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'அன்னமலிமொழில் புடை சூழ ஐயாற்றெம்' என்னும் பாடலில் திருவையாற்றின் சிறப்பினை ஞானசம்பந்தர் எடுத்துரைத்தவிதம் யாது? விளக்குக.

12. (அ) திருவெண்ணெய்நல்லூரில் வீற்றிருக்கும் சிவனை சுந்தரர் வழிபட்ட விதத்தினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகர் சிவனிடம் திருக்கோத்தும்பி வழி தூதுரைத்த விதம் குறித்து எழுதுக.

13. (அ) 'மாணிக்கங்கட்டி வைரஇடைக்கட்டி' என்னும் பிள்ளைத்தமிழ்ப் பாடலில் பெரியாழ்வார் குறிப்பிடும் பருவங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ஏர்மலர்ப்பூங்குழல்' என்னும் பாடலில் குலசேகர ஆழ்வார் பெருமாளை நெஞ்சம் நெக்குருகப் பாடிய விதம் குறித்து எடுத்தியம்புக.

14. (அ) அருணகிரிநாதர் தேன் என்று பாகு என்று முருகனை வழிபட்டு நின்றதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தாயுமானவர் இறைவனை வழிபட மேற்கொண்ட பாடல்நுட்பத்தினைப் புலப்படுத்துக.

15. (அ) 'என்னிலை தன்னை அறிந்தே' என்னும் குணங்குடி மஸ்தான் சாகிபுவின் சித்தர் போக்கினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ஐயனே உன் அழகைக்காண' என்னும் பாடலில் நாயக - நாயகி பாவத்தினை எடுத்தியம்புக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. மக்களிடம் தோன்றி கண்ணகி வரம் தந்த சிறப்பினை எடுத்துரைக்க.

17. சீவகன் விமலையைத் திருமணம் செய்த விதத்தினை விளக்குக.

18. திருவடி தொழுத படலத்தில் காணலாகும் கருத்துக்களைக் கம்பராமாயணம் வழி புலப்படுத்துக.

19. இயேசுவின் சிலுவைப்பாடுகளை இரட்சணியசரிதம் வழி நின்று ஆராய்க.

20. நபிகள் நதிகடந்த வரலாற்றின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

| S–0823 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1E2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### First Semester

### தமிழ்

### விருப்பப்பாடம் : காப்பிய இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. சிலம்பு கூறும் சோழநாட்டுப் பெருமை பற்றிக் கூறுக.

2. தேவந்தி மணிமேகலையின் துறவு பற்றிக் கூறியதை எழுதுக.

3. பாத்திர மரபு கூறிய காதையில் ஆபுத்திரன் எங்கு உதித்தான்? விளக்கம் தருக.

4. விமலையார் இலம்பகத்தில் விசயைக் கண்ட கனவு யாது?

5. விசயைப் பந்தாடுந்திறன் பற்றிக் குறிப்பிடுக.

6. இளையான் குடி மாறநாயனாரின் பக்திச் சிறப்பினைக் குறிப்பிடுக.

7. இரட்சணிய யாத்திரிகம் - குறிப்பு வரைக.

8. கிருட்டிணனார் இயற்றிய இலக்கியப் படைப்புகள் யாவை?

9. சீறாப்புராணம் நூலின் அமைப்பினைத் தருக.

10. விலாதத்துக் காண்டத்தின் நபியின் சிறப்புகள் ஏதேனும் இரண்டினைச் சுட்டுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சிலம்பில் வஞ்சினமாலைக் காதையின் சோழநாட்டுப் பெருமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வரும்தரு காதையில் பழம்பிறப்பு அறிவித்த கருத்துக்கள் பற்றி எடுத்தியம்புக.

12. (அ) பாத்திர மரபு கூறிய காதையில் ஆபுத்திரன் பசித்தோர்க்கு உணவளித்த முறையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) விமலையார் இலம்பகத்தின் கதைச் சுருக்கத்தினைத் தெளிவுபடுத்துக.

13. (அ) கம்பராமாயணத்தில் திருவடி தொழுத படலத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இளையான்குடி மாறநாயனாரின் பக்தி நெறியினை விளக்குக.

14. (அ) இரட்சணிய யாத்திரிகத்தின் சிறப்புகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) இரட்சணிய யாத்திரிகத்தில் இயேசுவின் மாண்புகளை எடுத்தியம்புக.

15. (அ) சீறாப்புராணத்தில் நபியின் பெருமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நபியின் மாண்புகளை நதி கடந்த படலத்தின் வழி எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. சிலம்பில் வஞ்சின மாலை வழி கண்ணகியின் சூளுரைகளைப் புலப்படுத்துக.

17. பாத்திரமரபு கூறிய காதையின் வழி அறியலாகும் அறப்பண்புகளைப் புலப்படுத்துக.

18. இறையான்குடி மாறநாயனாரின் சிவத்தொண்டினை நிறுவுக.

19. இரட்சணிய சரிதம் வழி அறியலாகும் பக்திக் கருத்துக்களை விளக்கி வரைக.

20. சீறாப்புராணத்தில் நதி கடந்த படலத்தின் சிறப்புகளைப் புலப்படுத்துக.

———————

**S–0824**

| Sub. Code |
|---|
| 23MTA1E3 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### First Semester

### தமிழ்

### விருப்பப்பாடம் : இந்திய இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. காளிதாசரின் சாகுந்தலம் குறிப்பு வரைக.

2. வேதாந்தங்கள் என்றால் என்ன?

3. சரத் சந்திரர் குறிப்பு வரைக.

4. வடமொழி இலக்கியங்களுள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

5. தெலுங்கு மொழி வளர்ச்சிக்கான தொண்டு புரிந்தோரின் இலக்கியப் பணிகளை ஆராய்க.

6. மலையாள எழுத்தாளர் பஷீர் அவர்களின் படைப்புகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

7. யூ ஆர் அனந்தமூர்த்தியின் படைப்புகளுள் இரண்டினை எழுதுக.

8. கிரிஷ் கிரிஷ் கர்னாட் குறிப்பு வரைக.

9. குருநானக் தேவ் கவிதைகளில் உள்ள சிறப்புகளில் இரண்டினை எழுதுக.

10. பாய் குருதாஸ் இலக்கியப் பணிகளை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வேதங்கள் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) உபபுராணங்கள் என்றால் என்ன?

12. (அ) இந்தி மொழி கவிதைகளின் விழுமியங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) சாத் சந்திரனின் இலக்கிய பங்களிப்பை விவரிக்க.

13. (அ) மலையாள எழுத்தாளர் கமலாதாஸ் தன் படைப்புகளில் உறவு சிக்கல்களை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) தெலுங்கு மொழி வளர்ச்சிக்கு இலக்கியங்களின் பங்களிப்பினை விளக்குக.

14. (அ) சமஸ்கரா நாவல் வெளிப்படுத்தும் சமூக உறவுகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) கன்னட எழுத்தாளர்களின் இலக்கிய படைப்புகளில் காணலாகும் விழிப்புணர்வு கருத்துக்களை குறிப்பிடுக.

15. (அ) அம்ரிதா ப்ரீதம் அவர்களின் முற்போக்கு கொள்கைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) விஜய் டெண்டுல்கர்ரின் நாடகங்களில் காணலாகும் சமூக விழுமியங்களை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. வால்மீகி ராமாயணத்தின் சிறப்புகளைக் கட்டுரைக்க.

17. இந்தி மொழி இலக்கியக் கூறுகளைக் விவரிக்க.

18. மலையாள மொழி இலக்கியத்தில் காணலாகும் சமூக மதிப்பீடுகளை ஆராய்க.

19. உலக வாழ்வின் உண்மை நிலையை சர்வக்ஞரின் எழுத்துக்கள் வழி விவரி.

20. மராட்டிய மொழி வளர்ச்சிக்கு இலக்கியங்கள் ஆற்றிய பங்கினை ஆராய்க.

———————

| S–0825 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1E4 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## First Semester

## தமிழ்

## விருப்பப்பாடம் — உரையாசிரியர்கள்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

1. உரைக்கு உரை – குறிப்பு வரைக.

2. உரை இல்லாத காலம் பற்றிக் குறிப்பிடுக.

3. உரையின் இயல்புகள் யாவை?

4. இளம்பூரணர் உரையின் உவமைகள் யாவை?

5. பத்துப்பாட்டு உரையின் சொல்லும் பொருளும் குறித்து எழுதுக.

6. பத்துப்பாட்டின் உரைநயம் பற்றிக் குறிப்பிடுக.

7. அரும்பதவுரையாசிரியரின் உரைநடைக் கருத்துக்கள் யாவை?

8. அடியார்க்கு நல்லார் உரையின் இயல்பு பற்றிக் குறிப்பிடுக.

9. இராமநுசக்கவிராயர் உரையின் சிறப்புகளைச் சுட்டுக.

10. பெருந்தேவனார் உரையின் தனித்தன்மைகளை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வருவனவற்றிற்கு **ஒருபக்க** அளவில் விடையளி.

11\. (அ) வாய்மொழியின் செல்வாக்கு குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) செய்யுள் வடிவ உரைகள் யாவை? விளக்குக.

12\. (அ) இளம்பூரணர் உரையின் உரைத்திறனை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சேனாவரையரின் ஆசிரியப்பணி குறித்துத் திறனாய்க.

13\. (அ) பதிற்றுப்பத்து உரையின் தனித்தன்மைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) புறநானூறு உரையின் தனித்தன்மைகளைச் சான்றுடன் விளக்குக.

14\. (அ) சிலம்பில் கதை நிகழ்ச்சியும் கட்டுக் கோப்பும் குறித்து உரையாசிரியர் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமுறை உரைகளின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

15\. (அ) ஆண்டிப்புலவர் உரையின் சிறப்புகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) கூழங்கைத் தம்பிரான் உரையின் தனித்தன்மைகளைச் சான்றுடன் எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16\. உரையாசிரியர்களின் தமிழ்த் தொண்டு குறித்து விவரிக்க.

17\. தொல்காப்பிய உரையாசிரியரின் புலமைத் திறத்தினைத் திறனாய்க.

18. பதிணென் கீழ்க்கணக்கு உரையின் தனித்தன்மைகளை உரையாசிரியர்கள் வழி நிறுவுக.

19. சைவசித்தாந்த உரைகளின் நயங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

20. திருமுறை உரைகளின் வழி அறியலாகும் உரை வெளிப்பாட்டுத் திறனைப் புலப்படுத்துக.

---

| S–0826 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1S1 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### First Semester

### தமிழ்

### ஊடகக்கலைத்திறன்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கும் விடையளிக்க.

1. தகவல் தொடர்பின் நன்மைகள் யாவை?

2. தகவல் தொடர்புச் சாதனத்தின் முதன்மை நோக்கம் யாது?

3. வானொலியின் சித்திர வடிவம் பற்றிக் கூறுக.

4. வானொலி நிகழ்ச்சிகளில் உரையாடலின் முக்கியத்துவத்தைத் தருக.

5. வானொலிச் செய்தியின் தனித்தன்மைகளைக் குறிப்பிடுக.

6. வானொலிச் செய்தியில் மொழிநடையின் சிறப்புகள் யாவை?

7. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பொது அறிவை மேம்படுத்தும் நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுக.

8. தொலைக்காட்சியில் தொகுத்தளிக்கும் நிகழ்ச்சிகளின் வடிவங்கள் யாவை?

9. தொலைக்காட்சியின் தகவல்மொழியின் சிறப்பினைத் தருக.

10. தொலைக்காட்சிக்குத் தோழமை நிலையங்கள் தருவன எவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) தகவல் தொடர்பு எனும் மகிழ்ச்சி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தகவல் தொடர்பினால் சமூகம் அடையும் முன்னேற்றம் குறித்து விளக்குக.

12. (அ) வானொலி நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் முறைகளைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) வானொலியில் பெண்கள் மேம்பாட்டிற்காக முன்னெடுக்கும் நிகழ்வுகளை விளக்குக.

13. (அ) வானொலியில் செய்தி மடல் எவ்வாறு அமைய வேண்டும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) வானொலியில் சட்டமன்றச் செய்தி தொகுப்பு வடிவம் குறித்து எழுதுக.

14. (அ) தொலைக்காட்சி நிகழ்ச்சியின் நன்மைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சியில் பேச்சு வடிவம் இடம்பெறுவன குறித்து எழுதுக.

15. (அ) தொலைக்காட்சி நிலையத்தின் செய்திப்பிரிவு தருவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சி நிலையத்தின் செய்திநிறுவனங்கள் தருவனவற்றை எடுத்தியம்புக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தகவல் தொடர்பும் சமூகமும் பற்றி கட்டுரை வரைக.

17. வானொலியில் நிகழ்ச்சி எழுதும் முறைகளைத் திறனாய்க.

18. வானொலிக்குச் செய்தி எழுதும் முறைகளை ஆராய்க.

19. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வகைகளும் வடிவங்களும் பற்றி கட்டுரைக்க.

20. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எழுதும் முறைகளை விவரி.

| S–0827 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2C1 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## Second Semester

## தமிழ்

## சமய இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் யாவை?

2. பன்னிரு திருமுறைகளில் நாவுக்கரசரின் பாடல்கள் எத்திரு முறையில் அடங்கும்? நாவுக்கரசரின் இயற்பெயர் என்ன?

3. பெரியாழ்வார் ஆண்டாளுக்கு வைத்த பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

4. நம்மாழ்வார் எனக் குறிப்பிடக் காரணம் யாது?

5. தாயுமானவர் பாடல்களை எவ்வாறு அழைப்பர்?

6. திருவருட்பா குறிப்பு வரைக.

7. தேம்பாவணி பெயர்க்காரணம் கூறுக.

8. கண்ணதாசனின் இறவாக்காவியம் எது? ஏன் அவ்வாறு புகழப்படுகிறது?

9. குணங்குடிமஸ்தான் சாகிபு எவ்வூரில் காட்சி கொடுத்தார்?

10. குறவஞ்சி குறிப்பு வரைக.

## பகுதி ஆ

(5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) 'மாதர்மடப்பிடியும்' எனும் தருமபுரிப் பதிக செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருநாவுக்கரசரின் தாயனே பாடல் வெளிப்படுத்தும் தெய்வ பக்தியை விவரி.

12. (அ) பெரியாழ்வார் குலசேகர ஆழ்வார் பெருமாளை சேவித்த சிறப்புகளை குறிப்பிட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) 'சிந்துரச் செம்பொடி' எனக் கூறி ஆண்டாள் எடுத்துரைக்கும் வைணவ பக்தி நெறியை விளக்குக.

13. (அ) சிவப்பிரகாச சுவாமிகள் பாடல்களின் சிறப்புகளை கைத்தல மாலை வழிநின்று விவரி.

(அல்லது)

(ஆ) கந்தர் அலங்கார பாடலில் முருகனை வழிபட்ட விதம் யாது?

14. (அ) தேம்பாவணியில் சூசை நோய்வாய்ப்பட்டதை வீரமாமுனிவர் எவ்வாறு விளக்குகிறார்?

(அல்லது)

(ஆ) திருவருள் அந்தாதி வெளிப்படுத்தும் மாயூரம் வேதநாயகரின் பக்தி நெறியை ஆய்க.

15. (அ) சிந்தைக்கினிய சீறா என சீறாப்புராணம் போற்றப்படுவதற்கான காரணங்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நத்தீசர் சதகம் வெளிப்படுத்தும் கருத்துக்களை விளக்கி வரைக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்கு விரிவான விடையளிக்க.

16. மாணிக்கவாசகரின் சைவ பக்திநெறியை மாணிக்கவாசகரின் அச்சோப்பதிகம்வழி நின்று விளக்குக.

17. திருமங்கையாழ்வார் சிறிய திருமடல் வழியாக வெளிப்படுத்தும் வைணவ நெறியை தொகுத்து எழுதுக.

18. தாயுமான சுவாமிகள் பாடல்கள் வெளிப்படுத்தும் பக்திநெறியை வழிநின்று புலப்படுத்துக.

19. தேம்பாவணி பிணிதேற்றுப்படலம் வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

20. ஞான ரத்தினக்குறவஞ்சியின் சாராம்சங்களை தொகுத்துரைக்க.

| S–0828 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025**

**Second Semester**

**தமிழ்**

**காப்பியமும் புராணமும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. மாதவியின் மடலில் இருந்த செய்தி யாது?

2. தமிழ்க்காப்பியங்களின் மையப்பொருளை மட்டும் தருக.

3. காமன் படிவத்தின் பின்னே காத்திருந்தவன் யார்? ஏன்.

4. சீவகன் குமரியாட விரும்பியதற்கான காரணமாக கூறியது என்ன?

5. சூளாமணி பெயர்க்காரணம் எழுதுக.

6. நாககுமாரனுக்கு வந்த தூதின் செய்தியை எழுதுக.

7. 'இயற்பகை' விளக்கம் தருக.

8. வில்லிபுத்தூரார் பற்றிக் குறிப்பிடுக.

9. 'யூசுப் சுலேகா காப்பியம்' குறிப்பு தருக.

10. வீரமாமுனிவர் குறித்தெழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) கண்ணகியின் கனவு குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'காதலற் பிரியாமல்' கவவுக்கை நெகிழாமல் - விளக்கம் தருக.

12. (அ) சுதமதியின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சுரமஞ்சரியின் பண்புநலன்களை விவரிக்க.

13. (அ) சூளாமணிக் காப்பியத்தின் அமைப்பினை எழுதுக.

(அல்லது)

(ஆ) கப்பல் வணிகன் நாககுமாரனிடம் உரைத்த அதிசயம் குறித்தெழுதுக.

14. (அ) இளவேனில், முதுவேனில் வருகையை வில்லிபாரதம் உரைக்கும் திறத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) சூர்ப்பணகையின் உள்ளக்குறிப்பினை விளக்கியுரைக்க.

15. (அ) உழவரின் வாழ்க்கை முறையை தேம்பாவணி வழிப்புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சுலேகாவின் காதல் குறித்தியம்புக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தரகு.

16. கவுந்தியடிகள், கோவலன் சந்திப்பு குறித்துக் கட்டுரைக்க.

17. மலர் வனம் புக்ககாதையில் இடம் பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. இயற்பகை நாயனாரின் பக்தித்திறம் குறித்து விவரிக்க.

19. அபிசந்திரன் அனுப்பிய தூதின் செய்திகளை எடுத்துரைக்க.

20. உமறுப்புலவர் புனல் விளையாட்டுப்படலத்தில் கூறிய செய்திகளை விவரிக்க.

---

**S–0829**

| Sub. Code |
|---|
| 23MTA2C3 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025.

## Second Semester

## தமிழ்

## தொல்காப்பியம் — சொல்லதிகாரம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பலவின்பால் ஈறுகளை எழுதுக.

2. இயற்கை, செயற்கைப் பொருள்களைக் கூறும் முறைகளைக் குறிப்பிடுக.

3. ஆறாம் வேற்றுமையின் இலக்கணம் தருக.

4. வேற்றுமை மயக்கம் என்றால் என்ன?

5. விளியேற்காப் பெயர்கள் யாவை?

6. இயற்பெயர் வகைகளை எடுத்தியம்புக.

7. முன்னிலை ஒருமை வினைமுற்று குறித்தெழுதுக.

8. 'உம்' இடைச்சொல் வருமிடங்களுக்குச் சான்று தருக.

9. 'மிகுதி செய்யும் பொருள என்ப' - விளக்குக.

10. தொகைச்சொற்களுள் இரண்டனுக்குச் சான்று தருக.

## பகுதி ஆ

(5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சுட்டுக்களின் இயல்பு குறித்து தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) பால் வழுவமைதியினை விவரிக்க.

12. (அ) நான்காம் வேற்றுமைக்குச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆகுபெயரின் வகைகளை எடுத்தியம்புக.

13. (அ) இடைச்சொல்லின் வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) “இருதிணைச் சொற்கும்ஓர் அன்ன உரிமைய” எனக் குறிப்பிடப்படும் விரவு வினைகள் குறித்தெழுதுக.

14. (அ) விளியேற்கும் ‘னகர’ ஈற்றுப்பெயர்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) சினைப்பெயரின் வகைகளை எடுத்துரைக்க.

15. (அ) ‘கடி’ என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களை நிரல்படுத்துக.

(அல்லது)

(ஆ) உம்மைத்தொகையின் இலக்கணம் கூறி, சான்றுகளுடன் விரித்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவல் விடையளிக்க.

16. திணை, பால் வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

17. இரண்டாம் வேற்றுமையின் இலக்கணத்தையும் அதன் பாகுபாடுகளையும் விளக்கியுரைக்க.

18. உயர்திணைப் பெயர்கள் குறித்து விவரிக்க.

19. வினையெச்ச வாய்பாடுகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

20. தொல்காப்பியத்தில் பதிவு பெறும் பொருள்கோள்களை விளக்குக.

---

**S–0831**

**Sub. Code**
**23MTA2E2**

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### Second Semester

### தமிழ்

### விருப்பப்பாடம் : தமிழ் அழகியல்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. அழகியல் என்றால் என்ன?

2. கலையின் கூறுகளை எழுதுக.

3. பாணர் யார்?

4. பண்பாட்டு மரபு பற்றிக் கூறுக.

5. குறிஞ்சிப்பாட்டு நூல் அறிமுகம் செய்க.

6. தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாடுகளைச் சுட்டுக.

7. உள்ளுறை என்பதன் பொருள் யாது?

8. அகம் – புறம் வேறுபடுத்துக.

9. கலை – வரையறுக்க.

10. குறியீடு விளக்கம் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) அழகியலுக்கு அறிஞர்கள் தரும் விளக்கங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) அழகுணர்ச்சி – விளக்குக.

12. (அ) பாணர், புலவர் பண்பாட்டு மரபைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அழகியல் ஒருங்கிணைப்புக் கோட்பாடுகளை வரிசைப்படுத்துக.

13. (அ) சங்க இலக்கியங்களை அறிமுகம் செய்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் கூறும் மொழிசார் கூறுகளைத் திறனாய்க.

14. (அ) அகம், புறம் பாகுபாடுகளைக் கண்டறிக.

(அல்லது)

(ஆ) உள்ளுறையைச் சான்றுடன் நிறுவுக.

15. (அ) கோடு – வண்ணம் வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) அழகியலை எவ்வாறு கட்டமைப்பது? விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. கலையில் இலக்கியம் சார்ந்த கூறுகள் காணப்படுதலை விளக்கியுரைக்க.

17. புலன் உணர்வு அடிப்படையில் அழகியலைக் கற்பிக்கும் திறத்தை வெளிப்படுத்துக.

18. தொல்காப்பியம் உணர்த்தும் கவிதையியல் கோட்பாடுகளை அடையாளப்படுத்துக.

19. அகம், புறம் பாகுபாடுகளை அழகியல் நோக்கில் கற்பிக்கும் முறைகளைத் தெரிந்துரைக்க.

20. 'கலை கலைக்காகவே' – எனும் கூற்றை நிறுவுக.

———————

| S–0832 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E3 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025.

## Second Semester

## தமிழ்

## விருப்பப்பாடம் – உலக இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                                        (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. காப்பியம் விளக்கம் தருக.

2. ஹோமர் எழுதிய இரட்டைக் காப்பியங்கள் யாவை?

3. நவீன நாடகங்கள் இரண்டினைக் கூறி, ஆசிரியர் பெயரைச் சுட்டுக.

4. குறியீட்டியம் என்றால் என்ன?

5. ஷேக்ஸ்பியரின் ஹேம்லெட் நாடகத்தைப் பின்பற்றி எழுதப்பட்ட தமிழ் நாடகம் எது?

6. சிறுகதை இலக்கணம் தருக.

7. நாவல் எம்மொழிச் சொல்லாகும் விளக்குக.

8. ஓஷோவின் ஜென்கவிதைகள் எனும் நூலின் ஆசிரியர் பெயரைச் சுட்டுக.

9. செவ்வியல் காலம் விளக்கம் தருக.

10. சமகால உலகக் கவிதை நூல் இரண்டினை மட்டும் எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) உலகப்புகழ்பெற்ற நாவலாசியர்கள் - ஐவரைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) ரஷ்யமொழி சிறுகதை எடுத்தாளர்கள் குறித்து எழுதுக.

12. (அ) 'படிமவியல்' என்றால் என்ன? சான்று தருக.

(அல்லது)

(ஆ) ஜென் கவிதைகள் இரண்டினைக் கூறி விளக்குக.

13. (அ) நாடக வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) நொண்டி நாடகம் குறித்து எழுதுக.

14. (அ) அரிஸ்டாட்டிலின் கவிதையில் கோட்பாடு எத்தகைய கருத்தை விளக்குகிறது.

(அல்லது)

(ஆ) சர்ரியிசக் கவிதைகளின் தனித்தன்மைகள் யாவை?

15. (அ) மறுமலர்ச்சி நாடகங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) ஹோமரின் இலியட்டை ஏதேனும் ஒரு தமிழ்க் காப்பியத்தோடு ஒப்பிட்டு விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. உலகளாவிய காப்பிய போக்குகள் குறித்து விவரி.

17. நவீன நாடகப் போக்குகளால் ஏற்பட்ட மாற்றங்களை தொகுத்துரைக்க.

18. கவிதைகளும் இலக்கிய இயங்கங்களும் கடந்து வந்த வரலாற்றைத் தெளிவுறுத்துக.

19. உலகப்புகழ் பெற்ற சிறுகதை ஆசிரியர்களின் படைப்பை திறனாய்வு செய்க.

20. புகழ்பெற்ற நாவலாசிரியர்களின் தனித் திறனை எடுத்தெழுதுக.

---

| S–0833 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E4 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## Second Semester

## தமிழ்

## விருப்பப்பாடம் இலக்கியமும் தொன்மமும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. தொன்மம் என்ற சொல்லுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களைக் கூறுக.

2. இந்திய நாட்டின் பழம்பெரும் புராணங்களின் பெயர்களை எழுதுக.

3. தொன்மக் கதைகள் எவற்றை அடிப்படையாகக் கொண்டது?

4. திருமால் சார்ந்த தொன்மக் கதைகளில் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக.

5. இறைமைக் கதைகள் என்பதன் பொருள் தருக.

6. இலக்கியங்களில் தொன்ம உச்சிகள் கையாளப்படும் விதத்திற்குச் சான்று தருக.

7. தொன்மங்களின் வகைகளை எழுதுக.

8. சமயத் தொன்மங்கள் என்றால் என்ன?

9. வெறியாட்டு – குறிப்பு வரைக.

10. கொற்றவை வழிபாட்டின் தொன்மம் குறித்து எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) தொன்மம் சொற் பொருள் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியங்களில் வெளிப்படும் தொன்மக் கதைகளைப் பகுப்பாய்க.

12. (அ) செவி வழிக் கதைகளின் இடம் பெயர்தலையும் கதைப் பரவலையும் ஆய்க.

(அல்லது)

(ஆ) புராண பழ மரபுக் கதைகளின் தாக்கம் சமய இலக்கியங்களில் இடம் பெறுமாற்றை இயம்புக.

13. (அ) தொன்மம் கதைகளின் பயன்பாடுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தொன்மக் கதைகளை ஏற்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் யாவை? விளக்குக.

14. (அ) தொன்ம உவமைகளின் பயன்பாட்டு சிறப்புகளை இயம்புக.

(அல்லது)

(ஆ) 'தொன்மமே இலக்கியமாக உருப்பெறுகின்றன' இக் கூற்றை ஆய்க.

15. (அ) நிலவியல் அடிப்படையில் உருவாகும் தொன்மங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொன்மச் செய்திகள் வழி மக்களிடையே நிலவி வரும் நம்பிக்கைகள் யாவை? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொன்மங்களின் வகைகளைக் கட்டுரைக்க.

17. சங்க இலக்கியங்களில் வெளிப்படும் புராண தொன்மக் கதைகளைத் தொகுத்துரைக்க.

18. காப்பியங்களில் தொன்மக் கருத்துக்கள் இடம் பெறுமாற்றை விவரி.

19. தொன்மக் கதைகள் இலக்கியங்களில் மாற்றம் பெறும் விதத்தினை விவரிக்க.

20. தொழில் மொழி குழுக்கள் அடிப்படையில் தொன்ம கருத்துக்கள் எவ்வாறு மாறுபடுகின்றன என்பதை ஆராய்க.

| S–0834 |

| Sub. Code |
|---|
| 23MTA2S1 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### Second Semester

### தமிழ்

### இதழியல்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours　　　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　(10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. ‘இதழியல்’ விளக்கம் தருக.

2. ‘சுதேச மித்ரன்’ இதழ் குறித்தெழுதுக.

3. இந்திய விடுதலை இயக்க இதழ்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. ‘பத்திரிக்கை கவுன்சில்’ என்றால் என்ன?

5. பத்திரிக்கை சுதந்திரம் குறித்த காந்தியடிகளின் கருத்தினை எழுதுக.

6. இதழ்களின் பொறுப்புடைமை பற்றித் தெளிவுப்படுத்துக.

7. ‘இடநிரப்பி’ விளக்கம் தருக.

8. ‘கேலிச்சித்திரங்கள்’ - குறிப்பு வரைக.

9. ‘நச்சு இதழ்கள்’ குறித்தியம்புக.

10. கீழ்க்காணும் கலைச்சொற்களுக்கு விளக்கம் தருக.

    (அ) Assignment

    (ஆ) Ribbon

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) ஈ.வெ.ரா. பெரியாரின் இதழியல் பணிகள் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) தமிழக இதழ்கள் தோற்றம் குறித்த செய்திகளை எடுத்துரைக்க.

12. (அ) இதழ்களில் பேட்டியின் முக்கியத்துவம் பற்றி விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) வாணிபப்பிரிவின் பணிகளைத் தெளிவுபடுத்துக.

13. (அ) பத்திரிகைகளின் பணிகள் குறித்து ஆய்க.

(அல்லது)

(ஆ) 'இன்றைய சூழலில் இதழியல் விதிகள்' - கட்டுரைக்க.

14. (அ) விளம்பர வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) துணுக்குகள் குறித்து விவரிக்க.

15. (அ) தகவல் தொடர்பு சாதனங்களுள் பத்திரிகை பெறுமிடத்தினைத் திறனாய்க.

(அல்லது)

(ஆ) காலத்திற்கேற்ற தொழில் நுட்பத்திற்கேற்ப பத்திரிகைகள் முன்னேறியுள்ளனவா? ஆய்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. உமக்குத் தெரிந்த புகழ்பெற்ற பத்திரிகையாளர் மூவரின் இதழியல் பணிகளைத் தொகுத்துரைக்க.

17. 'களையப்பட வேண்டும் கள்ளச்சாராயம்' என்னும் தலைப்பில் தலையங்கம் எழுதுக.

18. மக்கள் தொடர்பு சாதனங்களை வகைப்படுத்தி அவற்றுள் ஏதேனும் ஒன்றினைக் குறித்து விவரிக்க.

19. இருபக்க அளவில் கையெழுத்துப் பத்திரிகை ஒன்றினைத் தயாரிக்க.

20. புலனாய்வு இதழ்களின் நோக்கும் போக்கும் குறித்துக் கட்டுரைக்க.

———————

S–0835

Sub. Code
23MTA2S2

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## Second Semester

## தமிழ்

## தமிழும் அறிவியல் சிந்தனைகளும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடையளி

1. அறிவியல் தமிழ் என்றால் என்ன?

2. தமிழில் உள்ள மருத்துவ நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

3. பண்டைத் தமிழர்கள் சூரியனை மையமாகக் கொண்டு நேரத்தை எவ்வாறு பகுத்தனர்?

4. கரிகாலச் சோழனின் நீர் மேலண்மை சிந்தனையை எழுதுக.

5. தமிழர்கள் காற்றுக்கு இட்ட பெயர்களைக் கூறுக.

6. மனச் செயல்பாடுகள் – குறிப்பு வரைக.

7. கனவு நிலை உரைத்தல் – (திருக்குறள் அதிகாரம்) குறிப்பு வரைக.

8. சிலம்பில் கண்ணகி கண்ட கனவினை எழுதுக.

9. ஏதேனும் இரு கனவு நிலையினையும் அதன் பலன்களையும் கூறுக.

10. தீய கனவு குறித்த மக்களின் நம்பிக்கையினைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் இலக்கியங்களில் அறிவியல் தாக்கம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திருக்குறளில் இடம்பெறும் மருத்துவக் குறிப்புகளை விளக்குக.

12. (அ) சங்கப்பாடல்களில் வெளிப்படும் சோதிட சிந்தனைகளை வரையறு.

(அல்லது)

(ஆ) சங்க கால மக்களின் நீர் மேலாண்மைச் சிந்தனைகளை எழுதுக.

13. (அ) சோழர்கள் காலத்தில் நீரை சேமித்த விதத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐம்பூதங்களின் செயல்களாக இலக்கியங்கள் கூறுவனவற்றை இயம்புக.

14. (அ) சிக்மண்ட் பிராய்ட் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பிராய்டு மானிடரின் மனத்தை எத்தனை வகையாகப் பிரிக்கிறார்? விளக்குக.

15. (அ) நனவிலி மனம் – விளக்குக.

(அல்லது)

(ஆ) சிலம்பில் கோபிபெருந்தேவியின் தீக்கனாத் திறம் குறித்து உரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளி.

16. சங்க இலக்கியங்களில் பொதிந்துள்ள அறிவியல் சிந்தனைகளைத் தொகுத்துரைக்க.

17. அற இலக்கியங்களில் இடம்பெறும் மருத்துவக் குறிப்புகளைக் கட்டுரைக்க.

18. பண்டைய தமிழரின் வானியல் சார்ந்த சிந்தனைகளை இலக்கியங்கள் வழிப் புலப்படுத்துக.

19. பிராய்டு மனிதர்களின் மனச் செயல்பாடுகளை எங்ஙனம் பகுக்கிறார்? விவரி.

20. கனவுகள் குறித்து மக்களிடையே நிலவும் நம்பிக்கைகளைப் பட்டியலிடுக.

———————

| S–0836 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3C1 |

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## Third Semester

## தமிழ்

## சிற்றிலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours — Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடையளிக்க.

1. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக வீற்றிருந்தவர் பற்றி எழுதுக.

2. துமிழ்விடுதூது எவ்வகைப் பா? எத்தனைக் கண்ணிகளையுடையது?

3. சிற்றிலக்கியங்களில் சிந்து இடம்பெறும் விதம் யாது?

4. அந்தாதி - குறிப்பு வரைக.

5. குற்றால மலையில் வீற்றிருக்கும் கடவுள் பற்றிய செய்திகளைத் தருக.

6. பிள்ளைத்தமிழின் பருவங்களைச் சுட்டுக.

7. 'அம்புலி பருவம்' எந்த மாதம் பாடப்படும்?

8. பிள்ளைத்தமிழுக்கு தொல்காப்பியர் குறிப்பிடும் நூற்பாவை எழுதுக.

9. அபிராமி அந்தாதி எவ்வகைப் பா? ஆசிரியர் யார்?

10. கலப்பக உறுப்புகள் எத்தனை? நான்கினைச் சுட்டுக.

## பகுதி ஆ

(5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கலிங்கத்துப்பரணி 'இராசப்பாரம்பரியம்' வெளிப்படுத்தும் வரலாற்றுச் செய்திகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பள்ளு, கலம்பகம், பிள்ளைத்தமிழ் - குறிப்பு வரைக.

12. (அ) தமிழ் எழுத்துக்கள் வளர்ச்சிப் பெற்ற நிலையைத் தலைவி எவ்வாறு எடுத்துரைத்தாள்?

(அல்லது)

(ஆ) தமிழ்விடுதூதிவில் காணலாகும் இலக்கணச் 'செழுமையை விவரி.

13. (அ) குறத்தி குறிசொன்ன செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வசந்தவல்லி பந்தாடிய விதத்தினை விளக்குக.

14. (அ) முக்கூடற்பள்ளுவில் வடிகரையின் இயற்கை வளத்தினை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) முக்குகூடற்பள்ளுவில் காணலாகும் மாடுகள், நெல்லின் வகைகளைப் பட்டியலிடுக.

15. (அ) அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்துவில் காணலாகும் கடவுள் வாழ்த்து சிந்தனைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) முத்தொள்ளாயிரத்தின் நூல் கட்டமைப்பை எடுத்தியம்புக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிற்றிலக்கியங்களின் தோற்ற வரலாற்றைப் புலப்படுத்துக.

17. தலைவி தமிழை அரசனாக உருவகம் செய்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

18. குற்றாலக்குறவஞ்சி வெளிப்படுத்தும் இயற்கை வளத்தினை விவரிக்க.

19. முக்கூடற்பள்ளு உணர்த்தும் வாழ்வியல் செய்திகளை எழுதுக.

20. திருச்சந்தூர்ப்பிள்ளைத் தமிழில் அம்புலிப்பருவத்தில் பகழிக்கூத்தர் குறிப்பிடும் செய்திகளை விளக்குக.

| S–0837 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3C2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### Third Semester

### தமிழ்

### தொல்காப்பியம் - பொருளதிகாரம் - I முன் ஐந்து இயல்கள்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி

1. ஐந்திணைக்குரிய முதற்பொருளைச் சுட்டுக.

2. பிரிவின் வகைகளைக் குறிப்பிடுக.

3. வஞ்சி தானே முல்லையது புறனே - விளக்குக.

4. ‘குழவி மருங்கினும் கிழவதாகும்’ - விளக்கம் தருக.

5. ஆணுக்குரிய பண்புகள் எவை?

6. களவிற்குரிய பிரிவுகளைக் குறிப்பிடுக.

7. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப - விளக்குக.

8. கற்வில் வாயில்களாக அமைவோர் யாவர்?

9. இன்பம் குறித்து பொருளியல் கூறும் வரையறையைக் கூறுக.

10. உள்ளுறையின் வகைகளை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) உள்ளுறை உவமம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அகத்திணை தோழி கூற்றை எடுத்துரைக்க.

12. (அ) பாடாண் திணைக்கு உரியோர் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) உழிஞைத் திணைக்குரிய துறைகளை எடுத்துரைக்க.

13. (அ) இயற்கைப் புணர்ச்சியின்முன் நிகழ்வன குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாங்கன் நிமித்த வகைப்பாடுகளை எடுத்துரைக்க.

14. (அ) கற்பில் வாயில்களாக அமைவோர் திறம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மணவினைச் சடங்குகள் அமைந்த விதம் குறித்து எழுதுக.

15. (அ) அறத்தொடு நிற்றல் வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தலைவிக்குரிய ஒழுக்கலாறுகளைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. அகத்திணையில் தலைவனுக்குரிய கூற்றை ஆராய்க.

17. வாகைத்திணையின் இலக்கணம் கூறி அதன் வகைகளை விரித்துரைக்க.

18. களவில் தோழிக்குரிய கூற்று நிகழுமிடங்களைத் தொகுத்துரைக்க.

19. தமிழரின் வாழ்வியலைக் கற்பியல் வழிநின்று வரையறுக்க.

20. தலைவன், தலைவி தோழிக்குரிய மரபுகளைப் பொருளியல் வழி ஆராய்க.

———————

S–0838

Sub. Code
23MTA3C3

# M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

## Third Semester

## தமிழ்

## ஆராய்ச்சி நெறிமுறைகள்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

1. ஆய்வு நாகரீகம் குறித்து எழுதுக.

2. கருதுகோள் என்றால் என்ன?

3. தலைப்பைத் தேர்வு செய்யும் முறைகள் யாவை?

4. ஆய்வின் பயன்பாடு பற்றிக் குறிப்பிடுக.

5. ஒப்பீட்டு ஆய்வு என்றால் என்ன?

6. பகுப்பு முறை ஆய்வு குறித்து எழுதுக.

7. வினாநிரல் அமையும் முறைகள் யாவை?

8. நேர்காணல் உத்திகள் பற்றிக் குறிப்பிடுக.

9. அய்வேட்டில் சுருக்க குறியீட்டு விளக்கம் அமையும் முறைகளைத் தருக.

10. ஆய்வில் அட்டவணைகள் எவ்வாறு அமைய வேண்டும்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) கருதுகோளின் வகைகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆய்வுக்கொடையின் அவசியம் குறித்து எழுதுக.

12. (அ) ஆய்வு அனுபவங்கள் குறித்து எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) ஆய்வின் பயன்பாடு பற்றி விளக்குக.

13. (அ) அமைப்பு ஆய்வு என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆய்வில் பாராட்டு முறைகள் பற்றி தெளிவுபடுத்துக.

14. (அ) ஆய்வறிக்கையை விரித்து எழுதும் முறைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆய்விற்கு நேர்காணலின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புக.

15. (அ) ஆய்விற்குத் துணைநூற்பட்டியல் தயாரிக்கும் முறைகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) அய்விற்கு அட்டவணைகள், விளக்கப்படங்கள் அமையும் முறைகளை எடுத்துரைக்க.

## பகுதி இ

(3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ஆய்வாளரின் பண்புகளை விவரிக்க.

17. ஆய்வு அனுபவங்கள் யாவை? விளக்குக.

18. வரலாற்றியல் ஆய்வு குறித்து கட்டுரை வரைக.

19. பேட்டியின் வகைகள் யாவை? விளக்குக.

20. ஒரு சிறந்த ஆய்வேடு எவ்வாறு அமைய வேண்டும்? விவரி.

| S–0839 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3C4 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### Third Semester

தமிழ்

இலக்கியத் திறனாய்வும் கொள்கைகளும்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. இலக்கியம் - சொற்பொருள் விளக்கம் தருக.

2. சூத்திரம் என்றால் என்ன?

3. கொள்கை, கோட்பாடு குறித்து பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தரும் விளக்கம் யாது?

4. புறநிலைப் பாடல்களின் அடிப்படை இயல்புகளைக் குறிப்பிடுக.

5. கிளியந்த் புரூக்ஸ் அறிஞர் எழுதிய திறனாய்வு நூல்களைப் பட்டியலிடுக.

6. திறனாய்வின் வகைகளைக் குறிப்பிடுக.

7. விதிமுறைத் திறனாய்விற்கும் முடிபுமுறைத் திறனாய்விற்கும் உள்ள வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

8. திறனாய்வு முறைகளில் இயக்கங்கள் சார்ந்து தோன்றியவை யாவை?

9. மார்க்சிய அறிதல் கொள்கையின் மூன்று அடிப்படை விதிகளைக் குறிப்பிடுக.

10. கைலாசபதி அவர்களின் திறனாய்வுப் பணிகளைச் சுருக்கமாகத் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பழந்தமிழர், இலக்கியத்தை எவ்வாறு குறிப்பிட்டனர்? விளக்குக.

(அல்லது)

(ஆ) திறனாய்வு என்றால் என்ன? அறிஞர்கள் இச்சொல்லை எவ்வாறு கையாளுகின்றனர்?

12. (அ) தமிழ் இலக்கியக் கொள்கைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அறநூல்களை மதிப்பிடும் பாங்கினை விளக்குக.

13. (அ) புதுத் திறனாய்வு அடிப்படையில் தமிழ் இலக்கியச் சூழலை விளக்குக.

(அல்லது)

(ஆ) கவிதையில் தவறான வாசிப்பிற்குக் காரணங்களாக ரிச்சர்ட்ஸ் எனும் அறிஞர் கூறுவன யாவை?

14. (அ) முருகியல் முறைத் திறனாய்வு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மரபுவழித் திறனாய்வின் அடிப்படைகளை விளக்குக.

15. (அ) பெண்ணியத் திறனாய்வு என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலித்தியத் திறனாய்வு குறித்து விளக்குக.

## பகுதி இ

(3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இலக்கியக் கொள்கைகள், இலக்கிய வரலாறு குறித்து விளக்கி, இவற்றிடையேயான உறவு நிலைகளை விவரி.

17. சங்க இலக்கியக் கொள்கைகளை விளக்குக.

18. புதுத் திறனாய்வுக் கோட்பாடுகளை வகைப்படுத்தி விவரி.

19. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வினை விளக்குக.

20. இலக்கிய அணுகுமுறைகளில் மார்க்சியத் திறனாய்வு முறை குறித்து விவரி.

———————

| S–0840 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3E1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025**

**Third Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் : நோக்கு நூல்கள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                Maximum : 75 Marks

**பகுதி அ**                (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நோக்கு நூல்கள் எப்பிரிவின் வகையால் முறைப்படுத்தப்பட்டுள்ளன?

2. பெ.மாதையனின் நோக்கு நூலின் சிறப்பினை எழுதுக.

3. நோக்கு நூலின் இருவகைப் பயன்பாடுகளை எழுதுக.

4. அபிதான சிந்தாமணி - குறிப்பு வரைக.

5. தமிழ்ப்புலவர்களின் வரிசை பகுதிகள் யாவை?

6. திவாகர நிகண்டு - விளக்கம் தருக .

7. தொல்காப்பியத்தில் அகராதி கூறுகள் அடங்கிய இயல்களைக் குறிப்பிடுக.

8. கலைக்களஞ்சியம் என்றால் என்ன?

9. இணைய அகராதி என்றால் என்ன?

10. தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்ட வாழ்வியற்களஞ்சியத்தின் சிறப்பினைத் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அகராதி நிகண்டில் அகர நிரல் இடம்பெறுவதற்கானக் காரணங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திவாகரம், பிங்கலம் - விளக்கம் தருக.

12. (அ) நிகண்டு - சொற்பொருள் வரைக.

(அல்லது)

(ஆ) கலைக்களஞ்சியம் அவற்றின் பயன்கள் குறித்து எழுதுக.

13. (அ) பழமொழி அகராதிகள் குறித்த செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) பொதுக் களஞ்சியங்கள் பற்றிய செய்திகளை வரையறுக்க.

14. (அ) மரபுத் தொடர் அகராதிகள் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) வழக்கிறந்த சொற்களைப் பட்டியலிடுக.

15. (அ) அறிவியல் சார்ந்த களஞ்சியங்களின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நூல் அடைவு வகைகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. 18ஆம் நூற்றாண்டு அகராதிகள் குறித்த கருத்துக்களை விளக்கி வரைக.

17. நோக்கு நூல்களின் பண்புகளும் பயன்களும் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

18. நிகண்டுகளின் பொது கட்டமைப்பு யாவை? விளக்குக.

19. அகராதிகளின் வகைகளைச் சான்றுடன் விவரிக்க.

20. 20ஆம் நூற்றாண்டு அகராதிகளை அகர வரிசைப்படிப் பட்டியலிட்டு விளக்குக.

| S–0841 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3E2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025.**

**Third Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் : அயலகத் தமிழ் இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தமிழ்மொழி பேசப்படும் நாடுகளில் எவையேனும் நான்கின் பெயரைக் குறிப்பிடுக.

2. சிங்கப்பூர் எழுத்துலகம் தமிழுக்குத் தந்த இரு படைப்பாளர்களைக் குறிப்பிடுக.

3. வெள்ளிப்பாதரசம் என்னும் நூலின் சிறப்புகளைத் தருக.

4. இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் வரதர் என்ற புனைப்பெயரில் சிறுகதையின் சிறப்பு யாது?

5. மலேசியத் தமிழ்ச்சிறுகதையின் கதைப்பொருட்கள் யாவை?

6. மலேசிய பத்திரிகைகளில் ஏதேனும் இரண்டின் பெயரை எழுதுக.

7. சிங்கப்பூர் பொன்விழா சிறுகதைகளில் ஏதேனும் இரண்டின் பெயரை எழுதுக.

8. மூடிய கதவுக்குள்ளே என்னும் சிங்கப்பூர் சிறுகதையின் கதை மாந்தரைக் குறிப்பிடுக.

9. அலைவு இலக்கியம் என்றால் என்ன?

10. புலம் பெயர்தலுக்கான காரணங்களுள் இரண்டினை எழுதுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியம் வளம் பெறும் வழிமுறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழர்களும் புலம்பெயர்தலும் என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் விடையளி.

12. (அ) சங்கரியின் 'இன்று நான் பெரிய பெண்' என்னும் கவிதை தரும் செய்திகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தோனி கதையில் வெளிப்படும் சமூக முரண்பாட்டினை விளக்குக.

13. (அ) மலேசிய தமிழ் எழுத்தாளர்களின் கவிதைகள் பற்றி விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) மலேசிய எழுத்தாளர் பீர்முகமதுவின் வெடித்த துப்பாக்கிகள் என்னும் கதையினைத் திறனாய்க.

14. (அ) கைம்மாறு கதையின் வாயிலாக மா. அன்பழகன் உணர்த்தும் கருத்துகள் யாவை?

(அல்லது)

(ஆ) சிங்கப்பூர் பொன்விழா சிறுகதையான 'முறைமாப்பிள்ளை' யைத் திறனாய்க.

15. (அ) புலப்பெயர் கவிதைகளின் உரிப்பொருள் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) புலம்பெயர்ந்தோர் சிறுகதை முயற்சிகளைப் பட்டியலிடுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ‘உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியம்’ என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

17. ஈழத்துப் புதிணங்கள் உணர்த்தும் சமுதாயக் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. ‘மலேசியத் தமிழர்களும் படைப்பாக்கமும்’ என்னும் தலைப்பில் விரிவான கட்டுரை வரைக.

19. சிங்கப்பூர்ப் பொன்விழா சிறுகதைகளுள் ஏதேனும் இரண்டினைத் திறனாய்க.

20. புலம்பெயர்ந்தோர் சிறுகதைகளை மதிப்பிடுக.

———————

**S–0842**

| Sub. Code |
|---|
| **23MTA3S1** |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025**

**Third Semester**

**தமிழ்**

**போட்டித் தேர்வுக்குரிய இலக்கிய வரலாறு**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சங்கம் – குறிப்பு வரைக.

2. அகநானூற்றின் மூன்று பிரிவுகள் யாவை?

3. ஆளுடைய பிள்ளையின் புதுமைகள் யாவை?

4. தமிழ்க் கவிஞருள் அரசர் என்று யாரை வீரமாமுனிவர் குறிப்பிடுகின்றார்?

5. பெருங்கதை – குறிப்பு வரைக.

6. அறப்பளீசுர சதகத்தின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

7. தஞ்சைவாணன் கோவை – குறிப்பு வரைக.

8. இரட்டைப் புலவர்களின் தனித்தன்மைகளைக் குறிப்பிடுக.

9. பம்மல் சம்பந்தனாரின் தமிழ்ப் பணிகளைத் தருக.

10. உ.வே.சா.வின் தமிழ்தொண்டு யாது ?

## பகுதி ஆ  (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) முதல் சங்கம் குறித்த செய்தியை எழுதுக.

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகை நூல்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக.

12. (அ) ஐஞ்சிறு காப்பியங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) முதல் மூன்று ஆழ்வார்கள் குறித்து எழுதுக.

13. (அ) இரட்டைக் காப்பியங்கள் தரும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சித்தர்கள் என்பவர் யார்? அவர்களின் தன்மைமையும் தொகையையும் விளக்குக.

14. (அ) பிள்ளைத்தமிழ்ப் பருவங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவரின் தமிழ்ப் பணியை விவரி.

15. (அ) தமிழ்ச் சிறுகதையின் முன்னோடிகளுள் எவரேனும் நால்வர் குறித்து ஒருபக்க அளவில் எழுதுக.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதையின் உத்தி முறைகள் யாவை? எவையேனும் இரண்டினை விரிவாக எழுதுக.

## பகுதி இ  (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. முச்சங்கங்கள் குறித்த வரலாற்றை தொகுத்துரைக்க.

17. சைவம் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

18. கோவலனின் நற்பண்புகளைத் தொகுத்துரைக்க.

19. புதுக்கவிதையின் வளர்ச்சி நிலைகளை ஆராய்க.

20. தமிழ்புதினத் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரைக்க.

---

| S–0843 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA3S2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### Third Semester

### தமிழ்

### தமிழும் அறவியல் சிந்தனைகளும்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. அறம் என்றால் என்ன?

2. நாற்பொருள் பயத்தல் என்றால் என்ன?

3. அறத்தின் இலக்கணம் தருக.

4. உலக நீதி நூலின் ஆசிரியர் யார்? நூலமைப்பினை விளக்குக.

5. நாலடியார் நூலின் அமைப்பினை விளக்குக.

6. வெற்றி வேற்கை நூலின் ஆசிரியர் யார்? இந்நூலின் வேறு பெயர் என்ன?

7. "ஒன்னாரைத் தேறல்"- விளக்ககம் தருக.

8. "பூமி திருத்தியுண்"- ஔவை வழி நின்று விளக்குக.

9. "சூரரைப் போற்று"- பாரதியின் வழி விளக்கம் தருக.

10. "காலமழியேல்" என பாரதி விளக்குவது யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அற இலக்கியங்களின் தோற்றப் பின்னணி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) செல்வம் நிலையாமை என்றால் என்ன? விளக்குக.

12. (அ) சிறுபஞ்சமூலம் என்றால் என்ன? நூல் உணர்த்தும் அறங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) நீதிநெறி விளக்கம் நூலின் சிறப்புகளை விளக்குக.

13. (அ) நான்மணிக்கடிகை நூல் கூறும் அறங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பழமொழி நானூறு நூலமைப்பும் அதன் சிறப்புகளும் குறித்து விளக்குக.

14. (அ) பேதைமை யகற்று, பொருடனைப் போற்றி வாழ், மனந்தடு மாறேல், மிகைபடச் சொல்லேல், வெட்டெனப் பேசேல் - ஔவை வழநின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) சக்கர நெறிநில், சித்திரம் பேசேல், சீர்மை மறவேல், சுளிக்கச் சொல்லேல், சூது விரும்பேல் - பாடல்களின் பொருளை ஔவை வழி விளக்குக.

15. (அ) தையலை உயர்வு செய், நெற்றி சுருக்கிடேல், நையப்புடை, நோற்பது கைவிடேல், போர்த்தொழில் பழகு - பாரதி வழிநின்று விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் பரம்பொருளை எவ்வாறு வாழ்த்துகிறார்? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** <u>கட்டுரை வடிவில்</u> விடையளிக்க.

16. வள்ளுவர் அறத்தை எவ்வாறு பகுக்கின்றார்? விவரிக்க.

17. ஆசாரக்கோவை நூல் விளக்கமும் அறங்களும் குறித்து விளக்குக.

18. நிலையாமைச் சிந்தனைகளை அற இலக்கியங்கள் வழி விளக்குக.

19. ஔவையாரின் ஆத்திசூடி உணர்த்தும் அறங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

20. வாழ்வியல் நெறிகளை வகைப்படுத்தி, பாரதியின் புதிய ஆத்திசூடியோடு பொருத்தி விளக்குக.

---

| S–0844 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA4C1 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### Fourth Semester

### தமிழ்

### சங்க இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. இயற்கைப் புணர்ச்சி விளக்கம் தருக.

2. ஒருவழித்தணத்தல் என்றால் என்ன?

3. பேகனின் கொடை மடத்தினைக் கூறுக.

4. நள்ளியின் கொடைப் பண்பினை எழுதுக.

5. ஆறாம்பத்தின் பாட்டுடைத் தலைவனையும் பாடிய புலவரையும் குறிப்பிடுக.

6. பரிபாடலில் செவ்வேள், திருமால் பற்றிய பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

7. சிறுபாணாற்றுப்படையின் பாடுபொருளை எழுதுக.

8. நல்லியக்கோடனின் விருந்தோம்பல் பண்பினைக் கூறுக.

9. ‘அறத்தொடு நிற்றல்’ என்றால் என்ன?

10. குறிஞ்சிப்பாட்டுக் குறிப்பிடும் பறவை ஓட்டும் இசைக் கருவிகள் எவையெவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தோழிவாயில் மறுக்கும் அகநானூற்றுப் பாடற்கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றில் செவிலிகூற்றுப்பத்துக் கூறும் செய்திகளை எடுத்துரைக்க.

12. (அ) அதியமானின் வீரச் சிறப்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பாரியின் கொடைப் பண்பினை விளக்குக.

13. (அ) பரிபாடலில் செவ்வேள் குறித்த பாடற்கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து - குறிப்பு வரைக.

14. (அ) பாணர்களின் வறுமை நிலையை சிறுபாணாற்றுப்படை எவ்வாறு சித்திரிக்கிறது?

(அல்லது)

(ஆ) விறலியின் அழகு நலன்களை விளக்குக.

15. (அ) குறிஞ்சிப்பாட்டு வழி தலைவியின் வருத்தத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தலைவனின் மரைநாட்டின் வளத்தினைக் குறிஞ்சிப்பாட்டு வழிக்காட்சிப்படுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவான விடையளி.

16. கலித்தொகைக் காட்சிப்படுத்தும் பாலைநிலத்தினை ஆராய்க.

17. நும்பாடப்பகுதியில் இடம்பெறும் புறநானூற்று மகளிர் பாடல்கள் முன்னிறுத்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் வீரச்சிறப்பையும், வெற்றிச் சிறப்பையும் ஆராய்க.

19. சிறுபாணாற்றுப்படையின் காணலாகும் கடையெழு வள்ளல்களின் கொடைத்திறனை ஆராய்க.

20. குறிஞ்சிப்பாட்டில் காணலாகும் இயற்கை நலத்தினை விவரி.

| S–0845 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA4C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025**

**Fourth Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் — பொருளதிகாரம்-II பின் நான்கு இயல்கள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. எட்டுவகை மெய்ப்பாடுகள் யாவை?

2. மெய்ப்பாடு அறிதல் என்றால் என்ன?

3. உள்ளுரை உவமம் என்றால் என்ன?

4. உவமப் போலி குறித்து எழுதுக.

5. தனிக்குறில் அசை ஆகாத இடம் யாது?

6. ஆசிரியப்பாவால் அமைந்து வரும் அடிகளைத் தருக.

7. பாவின் பொருள் பற்றிக் குறிப்பிடுக.

8. பரிபாடலின் உறுப்புகள் யாவை?

9. மரபியலில் வேளாளர் தொழில் குறித்து எழுதுக.

10. நால்வகை வழிநூல்கள் எவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடையளிக்கவும்.

11. (அ) வினை, பயன், வடிவ, நிற உவமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உவமையின் தோற்றம் தேவை குறித்து எழுதுக.

12. (அ) உணர்வு நிலையாகக் குறிக்கப்படும் ஆறுவகை மெய்ப்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருமண வேட்கை வெளிப்படும் முறைகளை எடுத்துரைக்க.

13. (அ) அசையின் அமைப்புகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சீர் குறித்த கருத்துக்களை விளக்குக.

14. (அ) பாக்களின் அடிவரையறைகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) செய்யுளியலில் கலிப்பா குறித்த கருத்துக்களை எடுத்துரைக்க.

15. (அ) மரபியலில் அந்தணர், அரசர் மரபுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆண்பாற் பெயர்களின் விரிவை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. உணர்வு நிலையாகக் குறிக்கப்படும் அறுவகை மெய்ப்பாடுகளை விளக்குக.

17. அகமாந்தர்களுக்கும் உவமைக்கும் உள்ள தொடர்பினை ஆராய்க.

18. அடியின் வகைகளை விளக்கி வரைக.

19. மரபியல் வழி கலிப்பா பற்றிய கருத்துக்களை ஆராய்க.

20. பெண்பாற் பெயர்களின் விரிவை விவரிக்க.

---

**S–0849**

| Sub. Code |
| --- |
| 23MTA4S2 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2025

### Fourth Semester

### தமிழ்

### பணித்தேர்வுத் தமிழ் — I

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. கடைச்சங்க நூல்கள் எவை?

2. அகத்தியம் - குறிப்பு வரைக.

3. அப்பர் நிகழ்த்திய அற்புதங்களைக் குறிப்பிடுக.

4. நம்மாழ்வார் இயற்றிய படைப்புகள் யாவை?

5. தமிழில் தோன்றிய முதல் உலா எது? பாடியவர் யார்?

6. வீரமாமுனிவரின் படைப்புகளைக் குறிப்பிடுக.

7. கவிதை என்றால் என்ன?

8. சிறுகதைக்கு உரிய வரைவிலக்கணம் யாது?

9. தமிழ் மொழிக்கு நாளிதழ்கள் ஆற்றிய பங்கினைச் சுட்டுக.

10. நாடகம் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) முச்சங்கங்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) திருக்குறள் உரையாசிரியர்களின் தமிழ்ப் பணிகளை எடுத்துரைக்க.

12. (அ) முதலாழ்வார்களின் பக்திச் சிறப்பை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) சுந்தரரின் சிவப்பற்றினை எழுதுக.

13. (அ) உரையாசிரியர்களின் தமிழ்த்தொண்டு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பள்ளு இலக்கியத்தின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

14. (அ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நாவல் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எடுத்தியம்புக.

15. (அ) ஹைக்கூ கவிதையின் சிறப்புகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) சென்ரியூ கவிதைகளின் வளர்நிலைகளை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. சங்க இலக்கியங்களின் தனித்தன்மைகளை ஆய்க.

17. வைணவம் வளர்த்த தமிழ் பற்றி கட்டுரை வரைக.

18. பதினெண் சித்தர்களின் தமிழ்ப்பணி குறித்து ஆராய்க.

19. உரைநடை இலக்கிய வரலாறு வழி அறியலாகும் கருத்துக்களை விளக்குக.

20. இசைத்தமிழ் வரலாறு குறித்து விரிவாகக் கட்டுரைக்க.

———————